*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*01 03 2026 SUNDAY 7 15 AM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.*

- *பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுச்சேரியில் 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.*

- *நாட்டின் ஜவுளி ஏற்றுமதி 800 பில்லியன் டாலரை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.*

- *மேற்காசியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ராணுவ நடவடிக்கைகளுக்கு ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்டரஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

- *இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.*

*>>>>><<<<<*

*மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.*

*கேரள மாநிலம், செங்கணாச்சேரியில் தனியார் கல்லூரி நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், தொழில்நுட்ப துறையில் இந்தியா விரைவான முன்னேற்றம் கண்டு வருவதாக தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.*

*நேற்றிரவு சென்னை விமான நிலையம் வந்தடைந்த அவருக்கு  ஆளுநர் திரு ஆர் என் ரவி, மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.*

புதுச்சேரியில் இன்று காலை, 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

பின்னர், மதுரை செல்லும் அவர், 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பல்வேறு ரயில்வேத் திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர், தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக் கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுகிறார்.

>>>>><<<<<

அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள், ஈரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளதையடுத்து, மேற்கு ஆசிய நாடுகளில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

டெஹ்ரான் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ஈரான் தலைவர் திரு. ஹயத்துல்லா அலி காமினியின் அலுவலகம் அருகே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பின் மீதான ஈரானின் அச்சுறுத்தல் காரணமாக, அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில், 201 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 700-க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகளின் ராணுவ நிலைகள் மீது ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஈரான் நாட்டின் வான் எல்லைகள் மூடப்பட்டுள்ளதாகவும், இணையதள சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஈரான் நடத்தியுள்ள தாக்குதலுக்கு கத்தார், குவைத் நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார் மற்றும் குவைத் நாடுகளுடன் அங்குள்ள சூழல் குறித்து வெளியுறவு அமைச்சர் திரு ஜெயசங்கர் ஆலோசனை நடத்தினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வளைகுடா நாடுகளில் நிலவி வரும் பதற்றமான சூழல் கவலையளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து அந்தந்த நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும், இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அந்த நாடுகள் உறுதி அளித்துள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் உள்ள இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அபுதாபியில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

தேவையின்றி வெளியே வர வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துபாயில் உள்ள தூதரகம் தொடர்ந்து செயல்பட்டு இதுதொடர்பான தகவல்களை வெளியிட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் தங்கியுள்ள இந்தியர்கள் அங்குள்ள இந்தியத் தூதரகத்தின் ஆலோசனைகளை பின்பற்றுமாறும் அறிவுத்தப்பட்டுள்ளனர்.

அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய சுற்றுலாப் பயணிகள், வர்த்தகர்கள், செய்தியாளர்கள் உட்பட அனைத்து இந்திய வம்சாவளியினரிடமும் தொடர்பு கொண்டு வருவதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் உள்ள இந்தியர்கள், தேவையற்ற பயணத்தைக் தவிர்த்து பாதுகாப்பாக இருக்குமாறு டமாஸ்கஸில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, மேற்காசியாவில் நிலவிவரும் சூழல் குறித்து ஆய்வு செய்ய, ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. பஹ்ரைன், கொலம்பியா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியதன் பேரில் இந்த அவசரக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்காசியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ராணுவ நடவடிக்கைகளுக்கு ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்டரஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், சர்வதேச அமைதி மற்றும் பாதுபாப்பை உறுதி செய்யும் வகையில், உடனடியாக போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்களின் அவசர உதவிக்கு, மாநில அரசின் சார்பில் 24 மணிநேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, ஈரான் - இஸ்ரேல் இடையே போர் நிலவி வரும் சூழலில், பல்வேறு நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, 410 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஜவுளித்துறையின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு ஆயிரத்து 500 கோடி ரூபாய் கூடுதல் நிதி வழங்கியுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம், Bhiwani-யில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் ஜவுளி ஏற்றுமதி 800 பில்லியன் டாலரை எட்டியுள்ளதாக கூறினார்.

பல்வேறு நாடுகளிலிருந்து 250 டன் கண்ணாடி இழை இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது அவை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த சிறப்பு வகையான செயற்கை இழை, கட்டுமானத்துறை, விமானங்கள் மற்றும் காற்றாலை இயந்திரங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

இந்த கருத்தரங்கில் 14 நாடுகளைச் சேர்ந்த ஜவுளித்துறை நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

ஆந்திர மாநிலம், காக்கிநாடாவில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த சம்பவம் மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், இந்த விபத்தில் தங்களது அன்புக்குரியவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், இந்த சம்பவம் வேதனை அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்த வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

>>>>><<<<<

தனியார் பள்ளிகளின் கட்டண உயர்வுக்கு, இடைக்கால தடை விதித்துள்ள தில்லி உயர்நீதிமன்றத்தின் உத்தரவை வரவேற்பதாக, தில்லி கல்வி அமைச்சர் திரு. Ashish Sood தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், நீதிமன்றத்தின் இந்த உத்தரவு, அரசின் முடிவுக்கு வலுசேர்ப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இதன்மூலம், மாணவர்களின் பெற்றோர்களுக்கு கட்டணச் சுமை குறைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பள்ளிகள் நிலையிலான கட்டண ஒழுங்குமுறை குழு பரிந்துரைக்கும் வரை, எவ்வித கட்டண உயர்வும் அமல்படுத்தப்படாது என்று திரு. Ashish Sood கூறியுள்ளார்.

>>>>><<<<<

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஆஸ்திரேலியாவின் Hobert நடைபெறவுள்ள இப்போட்டி, இந்திய நேரப்படி மணி காலை 9.20-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<